**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 554/2019 P.W. 2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சுரேஷ்குமார் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. அழகப்பன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 25.05.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து அரசு போக்குவரத்துத்துறையில் பணியாற்றி செய்து வருகிறேன். அ.சா.1 மணிகண்டன் என்பவரை எனக்குத் தெரியும். அவர் நான் ஓட்டும் பேருந்தில் நடத்துனராக உள்ளார். 24.09.2017-ம் இரவு முட்டம் - நாகர்கோவிலுக்கு அரசு பேருந்து எண் TN27N1388 தடம் எண் 14D என்ற பேருந்தை நான் முட்டத்திலிருந்து நாகர்கோவில் நோக்கி சென்றுக் கொண்டிருந்த பொழுது சுமார் 08.30 மணியளவில் அம்மாண்டிவிளை சந்திப்பில் நான் பேருந்தை நிறுத்தி வைத்திருந்த பொழுது 4 நபர்கள் பேருந்திற்கு பக்கத்திற்கு வந்து பேருந்து நடத்துனர் மணிகண்டன் என்பவரிடம் வாய்தகராறு செய்துக் கொண்டிருந்தார்கள்.

2. அதன்பிறகு அவர்கள் நால்வரும் பேருந்திற்குள் ஏறி அ.சா.1 மணிகண்டனை கையால் அடித்தார்கள். ஆனால் அவர்கள் 4 பேரின் பெயர் மற்றும் அவர்கள் குறித்து எனக்குத் தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக புகார்தாரர் மணவாளக்குறிச்சி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நால்வரின் பெயர் மற்றும் விவரங்கள் குறித்து எனக்குத் தெரியுமா என்றாலும், அவர்களை நேரில் பார்த்து அடையாளம் காட்ட முடியுமா என்றாலும், அவர்களின் பெயர்கள் எனக்குத் தெரியாது. மேலும் அவர்களை நேரில் பார்த்தாலும் அடையாளம் காட்ட முடியாது.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL</u>**
**DEPOSITION OF WITNESS**

<u>(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial</u>

<u>Form No. 53 of Criminal Rules of practice 2019 )</u>

**<u>C.C.No. 554/2019 P.W.3/Additional Witness</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. விஜயலெட்சுமி | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 25.05.2026.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் தற்பொழுது மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் தலைமை பெண் காவலராக பணி புரிந்து வருகிறேன். அங்கு பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஐயப்பன் மற்றும் உதவி ஆய்வாளர் லட்சுமணன் ஆகியோரின் கையொப்பம் ஆவணங்களை பரிசீலனை செய்யும் பொழுது எனக்கு நன்கு தெரியும் என்பதால் நான் தற்பொழுது ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 24.09.2017-ம் தேதி 22.15 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஐயப்பன் என்பவர் நிலையப்பொறுப்பில் இருந்த பொழுது மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார்மனுவின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் 219/2017 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 332, 506(i) இ.த.ச சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் லட்சுமணன் என்பவரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

4. இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அவர் சம்பவயிடம் 24.09.2017–ம் தேதி 23.00 மணிக்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்துள்ளார். சாட்சி 1, 2 ஆகியோர்களை பணிநியமனம் செய்தவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். காயம்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த **காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஐயப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. அவரது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது 341, 294(b), 332, 506(i) இ.த.ச சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இந்த சம்பவம் நடைபெறவில்லை எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

<u>**மறுவிசாரணை:**</u>

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.